# இன்று பேறறிஞர் அண்ணாவின் 57வது ஆண்டு நினைவு நாள்! சிவகங்கை மாவட்டத்தில் அமைதிப் பேரணி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை. பிப். 3-

இன்று (3ம் தேதி) பேரறிஞர் அண்ணாவின் 57வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டத்தில் அமைதிப் பேரணி நடைபெறுகிறது .

இதுகுறித்து சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.



தமிழகத்தில் கழகத்தை உருவாக்கிய காஞ்சிமாநகர் தந்த காவியத்தலவர் உலகத்தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கும் ஒப்பற்ற தலைவர் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் வளர்ச்சிக்காகவும் , அயராது தனது இறுதி நாள் வரை பாடுபட்டு வந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.அவர் நம்மைவிட்டு பிரிந்தாலும் அவருடைய கொள்கைகள்,அவரது எண்ணங்கள் , சிந்தனைகளை கழகம் இன்று வரை கடைப்பிடித்து வருகிறது. அத்தகைய போற்றுதலுக்குரிய பேரறிஞர் அண்ணாவின் 57வது ஆண்டு நினைவு தினம் இன்று சிவகங்கை மாவட்டத்தில் அனுசரிக்கப்படுகிறது. அவரது நினைவு தினத்தை முன்னிட்டு சிவகங்கை, மானாமதுரை, சிங்கம்புணரி, திருப்பத்தூர், காரைக்குடி ஆகிய ஊர்களில்அமைதிப் பேரணியாக சென்று பேரறிஞர்அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன் . சிலைகள் இல்லாத மற்ற இடங்களில் பேரறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் , உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சார்பு அணி , நிர்வாகிகள் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளில் மீண்டும் 2026 இல் கழகத் தலைவர் முதல்வர் தளபதி தலைமையிலான ஆட்சி அமைய உறுதி ஏற்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா 57வது நினைவு தினம்!

## மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

இராமநாதபுரம், பிப். 3-

தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் பேறறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவேந்தலை முன்னிட்டு இன்று (03.02.2026 செவ்வாய்க் கிழமை) காலை 9.30 மணியளவில் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு இராமநாதபுரம் மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற உள்ளது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள். அனைவரும் தவறாது கேட்டுக்கொள்கிறேன். கலந்து கொள்ளுமாறு அன்புடன்



இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகரம் மேற்கு பகுதி பெருவிளை 4 வது வார்டு அ.தி. மு.க வட்ட செயலாளர் கோபால கிருஷ்ணன் தலைமையில் பெண்கள், இளைஞர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்ட செயலாளர், மேயர் ரெ மகேஷ் முன்னிலையில் தங்களை தி.மு.க வில் இணைத்து கொண்டனர். மாற்றுக் கட்சியில் இருந்து வந்தவர்களை மாவட்ட செயலாளர், மேயர் ரெ.மகேஷ் சால்வை அணிவித்து வரவேற்றார். உடன் மாநகர செயலாளர் ஆனந்த், பகுதி செயலாளர் சேக்மீரான், மாமன்ற உறுப்பினர் அமல செல்வன், வட்ட பிரதிநிதிகள் அபுபக்கர், பாலாஜி உட்பட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

# குன்றத்தூர் மத்திய ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

காஞ்சிபுரம், பிப்.3-

குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழக செயல் வீரர்கள் கூட்டம் இன்று (03.01.2026) மாலை 5.30 மணியளவில் மீனாட்சி மஹால் சோமங்கலத்தில் நடைபெறுகிறது.

குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடி வாக்கம் ஏ.மணி தலைமை வகிக்கிறார்.

மத்திய ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள் மு.சுப்பிர மணி, க.எழுமலை, மு. செல்வ மணி, வாசுகி மகேஷ், வே. ஹரி, மா.பரிமேலழகன், கே.எம். சி.சத்தியமூர்த்தி, ஏ.விஸ்வ நாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்ற னர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன், ஏ வந்தே மாதரம், உமா மகேஸ்வரி வந்தே மாதரம், பொன் ரமேஷ் கவி, பூ ஏழுமலை, சா.பாலகிருஷ்ணன், லட்சுமி ஞானசேகரன், எஸ்.வைரம், ஜி.ராயப்பா, தினேஷ், கந்தசாமி, மு.குமார், ப.அறிவொளி, மா.செ.பிரகாஷ், பொன். இளைய பாரதி, போ. ஜெகன், இரா.குமரவேல், ஏ.பாலாஜி, சே.பார்த்திபன், மு.பொன் மணி, கோ.தீபக், ரா.தேவ தர்ஷினி, சோபா ரகுநாதன், ஏ.இ.பரசுராமன், ரஞ்சித் குமார், சந்திரசேகர், தமிழ் தாசன், யுவராணி உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. காஜாமொய்தீன்

**பிப்ரவரி 3 (2018)**



**மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணி பகுதி பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்து, மாநில சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அண்ணாவே, ஆள்கிறார்!



**1969** பிப்ரவரி 3 ந்தேதி, தமிழகமெங்கும் இருண்ட மேகங்கள் போல் திரண்ட மக்கள் திரள், உலகமே அசைவற்றுப் போன்றதோர் உணர்வு! தமிழரெல்லாம் திக்கு தெரியாத காட்டில், இக்கட்டில் ஆழ்ந்தது போன்றதொரு தவிப்பு!

வக்கற்றுப் போனோமோ? வாழ வழியற்றுப் போவோமோ? என அவரவர் நிலையில் அழுது, அரண்டு அபயம் தேடி நின்றனர்.

" ஈராயிரம் ஆண்டுகளாய் அன்னைத் தமிழ் தவமிருந்து பெற்ற பிள்ளை, சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக்கவி நடையும், தன் உரைநடையால் கண்ட பூமான்.

நோக்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருந்த தம்பிமார் படைமீது விழியோட்டும் கோமான். தந்தையுறவை, தாயுறவை விஞ்சும் வகையில் அரசியலில் அண்ணன் தம்பியுறவை வளர்த்து, நினைக்கும் போதெல்லாம் சிந்தை அணுக்களை சிலிர்க்க வைத்த அண்ணன்,

ஐயோ எங்களை விட்டு ஏன் பிரிந்தாய்? எங்கு சென்றாய்? எனக் காலமெல்லாம் கதறிக்கதறி, மனம் பதறிப்பதறி துடிக்கவிட்டு சாவில்லா சரித்திர ஏட்டில் பொன்னெழுத்தாய் மாறினார் அன்புடை அறிஞர் அண்ணா!

சென்னை கடற்கரையில் அலைகளின் பேரிரைச்சலைக் கடந்து ஒலித்தது ஒரு குரல். அது, அண்ணாவின் இதயத்தை யாசித்து நின்ற தலைவர் கலைஞர் அவர்களின் கர, கரக்குரல்!

போரில் படைகளை வழிநடத்திய தளபதி வீரமரணமுற்றால், அவனது தம்பியோ, மகனோ செருமுனைக்குச் செல்ல மறுமொழியின்றி முன்வருதல் போல் அண்ணாவின் சிந்தனையாய், அவரைப் போன்றே, எழுத்து, பேச்சு, நாடகம், கலை, திரை, இலக்கியம், தெலிந்த சிந்தனை, தொலைநோக்குப் பார்வை, உருவ அமைப்பு, சமூக மதிப்பீடு, தோல்வியிலும், துரோகத்திலும் துவளாத மனத்தின்மை இவைபோல் எண்ணற்ற சாயல் கொண்ட தலைவர் கலைஞர் தனது அன்பு அண்ணனிடம், அரசியல் அரிச்சுவடி கற்றுத் தந்த அறிவாசனிடம் யாசித்து நின்றார்.

சௌமியன் மறைந்தார். சாதரணமானவன் வந்திருக்கிறேன் என்று தானும் தனது அண்ணனும் பிறந்த தமிழ் ஆண்டுகளை ஒப்பிட்டு, தன்னைத் தாழ்த்தி, தனது தலைவரை உயர்த்தியப் பெருவுள்ளம் தலைவர் கலைஞரின் அன்புள்ளம்.

சரித்திர பின்புலமின்றி, சாம்ராஜ்ஜிய பெருமை ஏதுமின்றி, சாமானிய குடும்பத்தில் தோன்றி, தும்பை மலர் உள்ளத்துடன், தூய லட்சியங்களுடன், அருவிநடை தமிழால், அறிவார்ந்த கணைதொடுத்து, ஆரியத்தின் தோலுரித்து, அண்ணா! அண்ணா! என எந்நாளும் இளைஞர்கள் படைத் தொடர, வெற்றி உலா வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மையெல்லாம் கதறவிட்டுப் பிரிந்தநாள் பிப்ரவரி 3.

இசையால் வசமாகா இதயமுண்டோ? என்பார்கள். அது போல அண்ணாவின் நாவண்மைக்கு, வாதத்திறமைக்கு, நகைச்சுவை சிதறலுக்கு அன்றைய இளைஞருலகம் அவருக்குக் கட்டுப்பட்டுக் கிடந்தது.

தனது அரசியல் பொதுவாழ்வை எப்படி எளிமையாகத் துவங்கினாரோ, அதுபோலவே, எளிய பாதையில் கடைசிவரை தொடர்ந்த பெருமகன் அண்ணா அவர்கள்.

அவருக்கு அரசியலில் கோபம், நட்பில் வைராக்கியம் என்றெல்லாம் பெரிதாக இருந்ததில்லை.

துவக்கத்தில் 1938-ல் நடைபெற்ற சென்னை நகராட்சி (அப்போது மாநகராட்சி என்று அழைக்கப்படவில்லை ) தேர்தலில் பெத்துநாயக்கன்பேட்டை வார்டில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பினை இழந்தவர் பின்நாளில் அகிலம் போற்றிய அறிவுச்சுரங்கம், அரசியல் மேதை அறிஞர் அண்ணா அவர்கள்.

அண்ணாவின் கொள்கையில் மாறுபாடு கொண்டவர்கள் கூட, அவரின் குளிர் தரும் அமுதத்தமிழில் இளைப்பாறிடவே செய்தனர். அவரை ஏற்றனர். மனதிற்குள் போற்றினர்.

வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கழக செய்தித் தொடர்பு
துணைச் செயலாளர்



தனது எண்ணங்களை தெளிவாக்கவும், வலியுறுத்தவும், கேட்போர் நெஞ்சில் பதிய வைக்கவும் உருவகங்களை பயன்படுத்துவதில் அண்ணா அவர்கள் தன்னிகரற்று விளங்கினார்.

அந்நாளைய ஆட்சியாளர்களின் உல்லாசப் போக்கை, ஊதாரித்தனத்தை, உணர்த்த வந்த அண்ணா, " கும்பி எரியுது! குடல் கருகுது! கோட்டை வாசிகளுக்கு, கோடை வாசஸ்தலம் ஒரு கேடா? " எனச் சாடினார்.

அண்ணாவின் சொல்வன்மை மிகப்பெரிய தம்பியர் படையை அவருக்கு ஏற்படுத்தியது. கையில் காசில்லாவிட்டாலும், மனதில் மாசில்லாமல் துடிப்போடு செயலாற்றும் தொண்டர்கள் அவருக்கு வாய்த்தது போல் எவருக்கும் வாய்த்ததில்லை. பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் பெற்றோர். சட்டங்கள் கற்றோர், எழுத்துலகில் ஏற்றம் பெற்றோர், கலைகளில் மகுடம் தரித்தோர், மக்கள் செல்வாக்கு மிக்கவர் என எவரும் அண்ணாவின் அன்பிற்கு அடிமையாகிக் கட்டுண்டனர். அண்ணாவின் எளிமையைச் சொல்லும் சில நினைவுகள்:

கழகத்தின் முதல் அலுவலகம் இராயபுரம் சூரிய நாராயணத் தெருவில் அமைந்திருந்த " அறிவகம் " தான் ஆரம்பத்தில் அண்ணா அவர்கள் சென்னை வந்தால் தங்குமிடம். இரண்டு தளமிருந்த கட்டிடத்தில் கீழே அலுவலகம், "நம்நாடு" பத்திரிகை. மேலே சிறிய அறை. மரத்தினாலான மேசை, நாற்காலி, ஒரு பெஞ்ச். கழிவறையைத் தவிர குளியலறை என்று பெரிதாக எதுவும் இருந்ததில்லை.

அண்ணா அவர்கள் நண்பர்கள் வந்தால் இரவெல்லாம் பேசுவார். இல்லாவிட்டால் எழுதுவார் அதிகாலை உறங்கப்போவார். வெற்றிவீரன் என்னை 10 மணிக்கு எழுப்புப்பா என்று அந்நாளில் அறிவகத்தில் அச்சாகும் நம்நாடு பத்திரிகையில் பணிபுரிந்த எனது தந்தையிடம் சொல்வாராம்.

உடன் கீழே தரையில் படுத்திருக்கும் எனது அப்பா விடிந்து வெகு நேரம் கழித்து, 10.10 வாக்கில் அண்ணாவை மெல்ல எழுப்பினால், " இன்னும் கொஞ்ச நேரம் தூங்குறேனே பா" என்று சிறு குழந்தை போல கெஞ்சுவாராம். அதே அறையில் சங்கர் எனப்பெயரிடப்பட்ட " பெமரேனியன் " நாயொன்றையும் அண்ணா அவர்கள் வளர்த்து வந்தார்.

தூங்கி எழுந்து, தேனீர் குடித்ததும், ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு அண்ணா அவர்கள் அலுவலக வளாகத்தின் கீழே குளிக்கப் போனால், நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன், என். வி. நடராசன் போன்ற இயக்கத்தின் முன்னணி தளகர்த்தர்கள் ஒருவர் தண்ணீர் ஊற்ற, ஒருவர் சீக்காய் தேய்த்து விட ஒரு மன்னருக்கு உண்டான பணிவிடையை தங்கள் அண்ணனுக்கு ஆற்றுவதில் அளப்பரிய பூரிப்பு அவர்தம் தம்பியருக்கு!

அண்ணா அவர்கள் குளித்துக் கொண்டிருக்கும் போதே, அண்ணாவின் நண்பர் எஸ்.எஸ்.பி.லிங்கம் அவர்கள், "வெற்றிவீரன் வருகிறாயா! அண்ணாவுக்கு சிற்றுண்டி வாங்கி வரலாம் " என்பாராம்.

அவரது காரில் பயணிக்கும் ஆசையில் எனது தந்தை உடன் செல்வாராம். வடசென்னையில் அன்றிருந்த ஹோட்டல் மராட்டா, கேப் அமின் போன்றவற்றில் அண்ணாவுக்குப் பிடித்த தலைக்கறி, சாப்ஸ், இட்லி, இடியாப்பம் வாங்கி வருவார்களாம்.

அண்ணாவை அமரவைத்து, ஆளுக்கொன்றை பிரித்து வைத்தால் , அதிலதில் கொஞ்சம் எடுத்துச் சாப்பிடுவாராம்.

ஒரு வித்தியாசமாக காபியில் ஓமப்பொடியை போட்டுச் சாப்பிடுவாராம் எளிமையின் திருவுருவம் அண்ணா அவர்கள். மாளிகை வாசம் கிடைக்கும். பாலிருக்கும், பழமிருக்கும், பஞ்சனையிருக்கும். ஆனால் ஒரு போதும் அந்த உத்தமருள்ளம் உல்லாசத்தை நாடியதேயில்லை. கழகப் பொதுக்கூட்டங்கள், நாடகங்கள் என்று எந்த நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் தொண்டர்களுக்கு சிரமத்தை ஒரு போதும் தந்தவரில்லை தாயுள்ளம் கொண்ட அண்ணா.

பின்நாளில் கழக உட்கட்சித் தேர்தலுக்காக தஞ்சை மாவட்டத்தில் தேர்தல் ஆணையாளராகச் சென்ற எனது தந்தை மற்றும் எங்கள் முன்னாள் பேரூர் செயலாளர் கண்ணதாசன் போன்றோரிடம் தஞ்சை தளகர்த்தர் மன்னை நாராயணசாமி அவர்கள் தனது வீட்டுத் திண்ணையைக் காட்டி, ஒரு முறை அண்ணா அவர்கள் மன்னைக்கு வந்த போது இரவு வெகுநேரம் சென்றதால், கதவைத் தட்டி எழுப்பி, எனக்குத் தொந்தரவு தர விரும்பாமல், இந்தத் திண்ணையிலேயே துண்டை விரித்துப் படுத்துவிட்டார்.

காலையில் எழுந்து வாசல் பெருக்க கதவைத் திறந்து திடுக்கிட்ட என் மனைவி உள்ளே வந்து திண்ணையில் யாரோ படுத்திருப்பதாக விபரம் சொல்ல, சென்று பார்த்தால், செந்தமிழ் நாட்டின் சீர்மிக்க சொத்து , அறிவுலகமேதை அண்ணா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார் என்று கண்கள் கசிய அண்ணாவின் எளிமையின் நினைவினைப் பகிர்ந்தாராம் மன்னை. வள்ளுவன் குறள் போல வடிவம் சிறிதாகக் கொண்டிருந்த அண்ணா, ஆட்சியேற்றும் இரண்டாண்டுகள் கூட இயற்கை அவரை நம்மிடம் விட்டு வைக்கவில்லை.

ஆனாலும் அவர் கொண்டுவந்த வரலாற்று சிறப்புமிக்க சட்டங்களான, இருமொழிக் கொள்கை!

இந்திக்கு இனி இங்கு இடமில்லை என்பதை பாருக்கு பறைசாற்றியது.

தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம், சுயமரியாதை திருமணங்கள் செல்லுபடியாகும் என்ற சட்டங்கள் அவரின் மொழிப்பற்றை, இனப்பற்றை, சுயமரியாதை சிந்தையை குவளையப் புகழவைக்கிறது.

இன்று அந்த அண்ணா அவர்கள் இல்லை. அவர் வளர்த்த தம்பி தலைவர் கலைஞர் அவர்களுமில்லை. அன்று மூண்டிருந்த இனப்பகை இன்னும் ஓயவில்லை. ஆரிய மாயை சூழ்ந்து மொழி வெறியின் நச்சுக்கரங்கள் தமிழினத்தை அழிக்கத் துடிக்கும் அபாய நிலை. இடையிடையே குறுக்கிலும், நெடுக்கிலும் கூச்சல் போடும் குட்டி பப்பூன்கள், சனாதன சங்பரிவாரங்கள் என எல்லையற்ற தொல்லை படர்ந்திருக்கும் வேளை.

எத்தனைத்தான் இருந்தென்ன? அத்தனையும் எதிர்த்து நிற்கும் சத்தான, சாதுர்யம் மிக்க திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் இருக்கிறார்.

சூழ்ச்சிகளை வேரறுக்க, சுயமரியாதைச் சுடரேந்தி, சனாதனத்தின் வைரியாக நமது இதயநிதி உதயநிதி அவர்கள் இருக்கிறார். அண்ணாவை எந்நாளும் போற்றி, அண்ணா பல்கலைக்கழகம், அண்ணா நூலகங்கள், அண்ணா மருத்துவமனைகள், அண்ணா மேம்பாலங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள், அண்ணா பெயரில் விருதுகள் என மாநிலமெங்கும் திராவிடமாடல் ஆட்சியில் அண்ணா நிறைந்திருக்கிறார்.

67 ல் தொடங்கிய அவரது ஆட்சி, தலைவர் கலைஞர், திராவிடப் பேரரசர் தளபதி என இன்றளவும், இதோ வருகின்ற 2026 தேர்தலிலும் தொடரவிருக்கிறது. ஒரு முறை காவியக்கவிஞர் வாலி அவர்கள், "அ.தி.மு.க.வில் அண்ணா கொடியில் பறக்கிறார். தி.மு.க.வில் தான் கொடிகட்டிப் பறக்கிறார்" என்றார்.

அதைத் தொடரோட்டமாய் தொன்றுதொட்டு கொண்டு சொல்ல, இன்னொரு நூற்றாண்டு ஏந்தி நிற்க, இளைஞர்கள் படை வந்தவண்ணம் இருக்கிறது. அந்த அண்ணாவின் பெரும் புகழுரைத்து, அவரை நெஞ்சில் பதித்து, பிப்ரவரி 3 -அன்று அமைதிப்பேரணியில் அணிவகுத்து, அஞ்சலி செலுத்திட சென்னைக்கு அழைக்கிறார் கண்ணான நமது தலைவர் தளபதியவர்கள்.

ஆட்சியேற்ற நாள்முதலாய் ஓயாமல் உழலும் நல்லாட்சி நாயகர் ஒய்விற்கு, ஒய்வு தந்து இந்த வாரத்தில் கூட காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சை, கும்பகோணம், சிவகங்கை சீமை என தந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பெரும் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

அவரின் எண்ணக்குறிப்பறிந்து செயல்படுவோம்! தலைமைப் பொறுப்பேற்ற நாள்முதலாய் தேர்தல் களங்களில் யுத்தத் தழும்பேறிய, தொடுத்த தேர்தலிலெல்லாம் வெற்றி மலர்பறித்த திராவிடச் சூரியனாம் தலைவர் தளபதியவர்களின் கரத்தை வலுப்படுத்துவோம்! திராவிடமாடல் அரசு மீண்டும் அமைந்திட அயராது உழைப்போம்!

அப்போதுதான் விழும்போதும் விதை போல் விழுந்த அண்ணாவின் ஆட்சி, அழும்போதும் மழைபோல் அழுத அண்ணாவின் ஆட்சி,

எழும்போதும் கதிர்போல் எழுந்த அண்ணாவின் ஆட்சி தமிழ் நாட்டில் தொடரும்!

அதோ, இசைமுரசு அனிபா அவர்களின் வெண்கலக் குரல் ஒலிக்கிறது. "அழைக்கின்றார்! அழைக்கின்றார்! அழைக்கின்றார் அண்ணா! வாழ்க அண்ணா! வாழ்க தலைவர் கலைஞர்! வெல்க திராவிடப் பேரரசர் தளபதி!

### தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 57 வது நினைவு நாள் அமைதிப் பேரணி!


## மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.பிப்.3

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு போதித்தவர், எல்லாராலும் பேரறிஞர் அண்ணா என்று போற்றப்படுபவர், தமிழர்களுக்காகவும்,தமிழுக்காகவும் பெரும் தொண்டாற்றியவருமான அறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தை முன்னிட்டு இன்று ( 03–02–2026) எனது தலைமையில் (மாவட்ட செயலாளர் ராஜா) காலை 9 மணிக்கு சங்கரன் கோவில் பீர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணியாக புறப்பட்டு அசெம்பிளி லாட்ஜ் முன்பு வரை நடந்து சென்று அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது.

ஆகவே மாநில,மாவட்ட,கழக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக்கொள்கிறேன்.



இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.